

# புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2054 | மே 11, 2023 | புரட்சி 22 | முழக்கம் 17 | விலை: ரூ.3.00


### *மதவாத ஆட்சி அமைக்க மன்னராட்சி உருவாகும் ஆபத்து*

# பா.ஜ.க. ஆட்சியை வீழ்த்த உறுதி ஏற்போம்! ஜனநாயக சக்திகளுக்கு சேலம் மாநாடு அறைகூவல்

*இந்து இராஷ்டிரம் அமைக்க மன்னராட்சியை நோக்கி நாட்டை இழுத்துச் செல்லும் ஆபத்துகள் எதிர்நோக்கியுள்ள நிலையில் பா.ஜ.க. அணியை வீழ்த்த மதச்சார்பற்ற ஜனநாயக சக்திகள் ஒன்று சேர வேண்டும் என்று சேலத்தில் கூடிய (ஏப்.29, 30, 2023) திராவிடர் விடுதலைக் கழக மாநாடு அறைகூவல் விடுத்துள்ளது.*

இது தமிழ்நாடு; இளம் தலைமுறை எச்சரிக்கை மாநாட்டுத் தீர்மானங்கள்:

**வேத மத ஆட்சியின் ஆபத்து : 1)** தமிழ்நாட்டில் நீண்டநெடுங்காலமாக பார்ப்பனரல்லாத மக்களின் சுயமரியாதை, சமூகநீதி, பெண்ணுரிமைக் கொள்கைகளை சீர்குலைத்து வேத பார்ப்பனிய ஆட்சியை இந்துத்துவம் என்ற பெயரில் கொண்டுவர ஒன்றிய பாஜக ஆட்சி திட்டமிட்டு செயல்பட்டு வரும் நிலையில் அந்த ஆபத்தை தமிழர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்றும் மீண்டும் வேத பார்ப்பனியம் ஆட்சிக்கு வந்தால் நாம் அடிமையாகி படுகுழியில் தள்ளப்படுவோம் என்றும் நமது முன்னோர்கள் பெற்று தந்த தன்மான உணர்வை இழந்து கீழ் மக்கள் ஆகிவிடும் ஆபத்து உருவாகிவிடும் என்பதையும் இம்மாநாடு தமிழர்களுக்குச் சுட்டிக் காட்டுகிறது.

**விளிம்பு நிலை இந்துவும் – பார்ப்பன இந்துவும் : 2)** சனாதன சக்திகள் தங்களை இந்துக்களின் காவலர்கள் என்று கூறிக் கொண்டு ஏழை எளிய இந்து மக்களின் கல்வி உரிமைகளைப் பறித்து, வரித் திணிப்பு, பெட்ரோல், டீசல், கேஸ் விலை உயர்வு என்று பல்வேறு பொருளாதார சுமைகளை அவர்கள் மீது சுமத்தி வருகிறார்கள் அதே நேரத்தில் பார்ப்பனியத்தை உறுதிப்படுத்த அதிகாரம் மிக்க பதவிகளில் பார்ப்பனர்களை நியமித்தல், சமஸ்கிருதத்தை திணித்தல், பசுவதைத் தடைச்சட்டம், மதமாற்ற தடைச் சட்டம், ராமன் கோயில் கட்டுதல் போன்ற நடவடிக்கைகளில் தீவிரம் காட்டி வருகிறார்கள். ஒடுக்கப்பட்ட இந்துக்களை வாக்கு வங்கிகளாக பயன்படுத்துவதும் அதே நேரத்தில் அவர்களைப் பயன்படுத்திப் பார்ப்பன உயர்ஜாதி இந்துக்களை சமூக அரசியல் அதிகாரம் மிக்கவர்களாக உறுதிப்படுத்துவதுமே இவர்கள் பேசும் இந்துத்துவம் என்பதன் உள்ளடக்கம் என்பதைத் தமிழர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்று மாநாடு சுட்டிக் காட்டுகிறது.

**சனாதனத்துக்கு மரண அடி தரும் திராவிட மாடல் : 3)** வேத சனாதன கருத்துகள் பெண்களை அடிமைகளாக்குகிறது. அவர்கள் உரிமைகள் தரக் கூடாதவர்கள் என்று மனு சாஸ்திரம் கீதை போன்ற புனித நூல்கள் இதை வலியுறுத்துகின்றன. இதைத் தகர்த்தெறிந்து பெண்களுக்கு சொத்துரிமை, கணவனை இழந்த பெண்களுக்கு மறுமண உதவி, கல்லூரிப் படிப்புக்கு ஊக்கத் தொகை, கட்டணம் இல்லாத பேருந்து பயணம், மகளிர் உரிமைத் தொகை போன்ற பெண்கள் உரிமைத் திட்டங்களை திமுகவின் திராவிட மாடல் ஆட்சி நிறைவேற்றி இந்தியாவுக்கே வழிகாட்டி வருகிறது. நீட், இடஒதுக்கீடு உரிமை, மாநில உரிமைகளுக்குத் தொடர்ந்து குரல் கொடுத்து சட்டப் போராட்டம் நடத்துவது திராவிட மாடல் ஆட்சியில் சரியான கொள்கை திசை வழிப் பயணம் ஆகும். சனாதன வேத மதங்களுக்கு வெடி வைத்துத் தகர்ப்பதை இந்தப் பெண்ணுரிமைத் திட்டங்களை, இளம் பெண்களுக்கான இத்திட்டங்களை சகதோழர்களிடம் எடுத்துக் கூறி ஆதரவு திரட்டி சனாதன சக்திகளின் பிரச்சாரங்களை முறியடிக்க வேண்டும் என்று மாநாடு கேட்டுக் கொள்கிறது.

**போலி தமிழ் தேசியம் எச்சரிக்கை : 4)** திராவிடம் என்பது மொழி, நிலம், பண்பாடு போன்ற மூன்றையும் உள்ளடக்கிய ஒரு குறிச்சொல். பார்ப்பனிய அரசியல் பண்பாட்டு அதிகாரத்திலிருந்து பார்ப்பனரல்லாத மக்களை மீட்டெடுத்து அவர்களை சுயமரியாதையும் சமத்துவம் கொண்ட மக்களாக மாற்றுவதே திராவிடம். திராவிடம் தமிழர்களுக்கு எதிரானது என்றும் தெலுங்கர், கன்னடர், மலையாளிகளுக்கு அடிமைப்படுத்துவது என்றும் சில போலி தமிழ் தேசியவாதிகள் திராவிட எதிர்ப்புப் பேசி அதை திராவிட மாடல் ஆட்சிக்கு எதிர்ப்பாகப் பயன்படுத்தி வருகிறார்கள் திராவிட எதிர்ப்பாளராக தங்களை அடையாளம் காட்டிக் கொள்ளும் பாஜகவுக்கு மறைமுகமாக இந்த போலி தமிழ் தேசியவாதிகளின் திராவிட எதிர்ப்பு துணை போகிறது என்பதையும் இந்த தமிழ் தேசியவாதிகள் தங்களின்இந்து அடையாளத்தையும் ஜாதி அடையாளத்தையும் பெருமையாகக் கருதி இப்போது உயர்த்திப் பிடிக்கத் தொடங்கி இருப்பதையும், இவர்களின் மறைமுக ஆதரவு வேத பார்ப்பனியத்துக்கு வலிமை சேர்த்துக் கொண்டிருப்பதையும் இம்மாநாடு எச்சரிக்கையுடன் சுட்டிக்காட்டுகிறது.

**ஆளுநர்களின் அடாவடி : 5)** பாரதிய ஜனதா கட்சி அல்லாத ஆட்சிகள் நடக்கும் மாநிலங்களில் ஒன்றிய ஆட்சியால் திணிக்கப்படும் ஆளுநர்கள் ஆட்சிக்கு இடையூறுகளை உருவாக்குவதும் சட்டமன்ற தீர்மானங்களை ஒப்புதல் தராமல் முடக்குவதும் வழக்கமாகி விட்டது. தமிழ்நாட்டின் ஆளுநர் இன்னும் ஒரு படி மேலே போய் திராவிடர் எதிர்ப்புக் கருத்துக்களையும் சனாதன பார்ப்பனியக் கருத்துக்களை வலியுறுத்தியும் தமிழ்நாட்டுக்கே வழிகாட்ட வந்த தலைவரைப் போல தன்னை கருதிக் கொண்டு பேசி நடந்து, தமிழக அரசிடம் இருந்து ஊதியம் பெற்றுக் கொண்டு அரசியல் சட்டவரம்புகளை மீறி நடந்து வருகிறார். நீட்விலக்கு உள்ளிட்ட மக்களால் தேந்தெடுக்கப்பட்ட கட்சியின் சட்டங்களை முடக்குகிறார். சனாதன பார்ப்பனிய சக்திகளின் கூடாரமாக ஆளுநர் மாளிகையை மாற்றி வருகிறார். தமிழ்நாட்டின் தனித்துவத்திற்கு எதிரான இந்த மண்ணின் உளவியலை சீர்குலைக்கும் ஆளுநரை ஒன்றிய ஆட்சி உடனடியாக திரும்பப் பெற வேண்டும் என்று மாநாடு கேட்டுக் கொள்கிறது இல்லையென்றால் மக்கள் போராட்டம் வெடிக்கும் என்று மாநாடு எச்சரிக்கிறது.

**6)** பெரியாரின் நெஞ்சில் தைத்த முள்ளாகக் கருதப்படும் அனைத்து இந்துக்களும் அர்ச்சகராகும் திட்டத்தை தமிழ்நாட்டில் திராவிட மாடல் ஆட்சி 24 கோயில்களில் அமுல்படுத்திய நிலையில் கருவறைக்குள் தாங்கள் நிலைநாட்டி வந்த மேலாதிக்கம் குலைந்து போய்விட்டதே என்று பார்ப்பனர்கள் பதறி வருகிறார்கள். அண்மையில் அரசால் நியமிக்கப்பட்ட திருவரங்கம் வயலூர் முருகன் கோயிலின் இரண்டு பார்ப்பனர்அல்லாத அர்ச்சகர்களை மதுரை உயர்நீதிமன்றம் பதவி நீக்கம் செய்து உத்தரவிட்டுள்ளது. பாரம்பரியமாக ஏற்கனவே இருந்துவரும் முறையான நியமனமில்லாத, முறையான கல்வித் தகுதி பெறாத பார்ப்பன அச்சகர்களையே ஆகம விதிப்படி தொடர்ந்து பணி செய்ய அனுமதிக்க வேண்டும் என்று அரசுக்கு அறிவுரை கூறியுள்ளது. பழக்க வழக்கம் ஆகமம் என்ற பெயரில் கடவுளிடம் நெருங்க முடியாத சமூகத்தினராக சூத்திர இந்துக்களும் பெண்களும் தொடர்ந்து இழிவுபடுத்தப்பட்டு வருகிறார்கள் இந்தத் தீர்ப்பை எதிர்த்து தமிழ்நாடு அரசு உரிய சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று மாநாடு வலியுறுத்தி வருகிறது.

**மன்னராட்சியை நோக்கி : 7)** இந்துராஷ்டிரம் என்பது மன்னர்கள் ஆட்சியில்தான் சாத்தியம் என்பதால் நீதிமன்றம், சட்டமன்றம், பொதுத் துறை நிறுவனங்கள், தேர்தல் ஆணையம் போன்ற ஜனநாயகக் கட்டமைப்புகளை சிதைப்பதும், மாநிலங்களின் அடையாளங்களை அழிப்பதும் ஒன்றிய ஆட்சியாளர்களுக்கு இப்போது அத்தியாவசியத் தேவையாக மாறி இருக்கிறது. அதன் காரணமாக பொதுத் துறை நிறுவனங்களை ஒழித்து தங்களோடு உடன்பாடு கொண்ட அதானி போன்ற கார்ப்பரேட்டுகளை முறைகேடாக வளர்த்து விடுவதும் இதே நோக்கத்தில் தான் என்பதை மாநாடு சுட்டிக் காட்டுகிறது. இந்த ஆபத்தை நாம் எதிர் கொண்டு தடுத்து நிறுத்தியாக வேண்டும். எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ஜனநாயகம் என்ற குடைக்குள் ஒற்றை ஆட்சியாக இந்துராஜ்யத்தை உருவாக்கும் மன்னர் ஆட்சியை ஏற்படுத்தி நாட்டை வேத காலத்திற்கு இழுத்துச் செல்லும் ஆபத்தான திட்டங்களோடு பாஜக களம் இறங்கத் தயாராகி வருவதைத் தமிழர்கள் எச்சரிக்கையுடன் உணர வேண்டும். எதிர்வரும் தேர்தலில் தமிழ் நாட்டில் இந்த சனாதன சக்திகளை மண் கவ்வச் செய்ய தமிழ்நாட்டின் மதச் சார்பற்ற ஜனநாயக பெரியாரிய அம்பேத்கரிய மார்க்சிய மனித உரிமை சக்திகள் ஒருங்கிணைந்து களம் காண முன்வரவேண்டும் என்று மாநாடு அறைகூவி அழைக்கிறது.

(“வைக்கம் போராட்டம் முடியவில்லை” என்ற
கழகத் தலைவர் கொளத்தூர் மணி முன் வைத்த தீர்மானம்
கடந்த இதழில் வெளியிடப்பட்டுள்ளது.)

## சேலத்தில் கழகச் செயலவைக் கூடுகிறது!

*சேலத்தில் எதிர்வரும் மே 21, 2023 காலை 10 மணியளவில் கழகச் செயலவைக் கூடுகிறது.*

***பொருள் :*** *மாநாடு பற்றிய ஆய்வு, எதிர்காலச் செயல் திட்டங்கள் மற்றும் மாநாடு வரவு செலவுகள் ஒப்படைத்தல்.*

*செயலவை உறுப்பினர்கள் தவறாது கலந்துக் கொள்ள வேண்டுகிறோம்.*

*இடம் பின்னர் அறிவிக்கப்படும்.*

*கொளத்தூர் மணி, தலைவர்*

*விடுதலை இராசேந்திரன், பொதுச் செயலாளர்*

தலையங்கம்

## எல்லை மீறாதீர், ஆளுநரே!

மே 4 ஆம் தேதி வெளிவந்த Times of India நாளிதழுக்கு தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி விரிவான பேட்டி ஒன்றை அளித்திருக்கிறார். வழக்கமான உளறல்கள் தான் இந்த பேட்டியிலும் இடம் பெற்றிருக்கின்றது. தமிழ்நாட்டை சீண்டி பார்த்திருக்கிறார். திராவிட மாடல் என்ற ஒன்று கிடையாது. அது காலாவதியான தத்துவம், விரக்தியான மனநிலையில் இருக்கிறவர்கள் அது நீடிக்க வேண்டும் என்பதற்காக தூக்கிப் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். உண்மையில் நாம் “ஒரே பாரதம் ஒரே இந்தியா” என்ற கொள்கையின் கீழ் வாழ்கிறவர்கள், இதற்கு எதிரானது தான் திராவிட மாடல். அது காலாவதியாகிவிட்டது என்று அவர் பேசியிருக்கிறார்.

திராவிட மாடலுக்கு எதிராக உருவான சனாதன தர்மத்தைத் தான் தனது கொள்கை என்று இந்த பேட்டியில் உயர்த்துப் பிடிக்கிறார் ஆளுநர் ரவி. ஆக திராவிட மாடல் காலாவதியாகிவிட்டது, ஆரிய மாடலான சனாதனம் தான் நமக்கான அடையாளம் என்று பச்சையாக ஆரியப் பெருமை பேசுகிறார்.

தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின், “காலாவதியானது திராவிடம் அல்ல; ஆரியம் - வர்ணாஸ்ரமத்தைக் காலாவதியாக்கியதுதான் திராவிடம்” என்று சரியான பதிலடி தந்திருக்கிறார்.

சனாதன தர்மம் என்பது ஆரியத்தின் கற்பனை. அவர்கள் சொல்லு கிறார்கள் இந்த உலகம் முழுவதும் சனாதன தர்மமாகத்தான் இருந்தது. அதற்குப் பிறகு தான் வெவ்வேறு மதங்களே வந்தன, இந்துக்களுடைய அடையாளம் சனாதன தர்மம். சனாதன தர்மம் என்பது என்றைக்குமே மாற்ற முடியாதது. அதற்கு முடிவும் இல்லை, அழிவும் இல்லை என்று பார்ப்பன பண்டிதர்களாலும், ஆர்எஸ்எஸ் குருக்களாலும் விளக்கம் சொல்லப்படுகிறது.

சனாதனம் என்பது வேதத்தை அடிப்படையாகக் கொண்டது. அது உலகின் மிக உயர்ந்த பண்பும் ஒழுக்கமும் கொண்ட ஆரிய இனத்துக்கு உரிமையுடையது என்று சனாதன தர்மம் குறித்து விளக்கும் தர்ம நூல்கள் கூறுகின்றன. அந்த ஆரியப் பெருமைப் பேசும் ஆளுநர் ரவி, சனாதன தர்மத்துக்கு புது விளக்கம் தருகிறார். “அது வர்ணாஸ்ரமத்தைக் குறிப்பது அல்ல; அனைத்து மதங்களையும் மதிப்பதே சனாதன தர்மம்” என்று பொருள் விளக்கம் தருகிறார். சனாதன தர்மம் மட்டுமே உலகம் முழுதும் இருந்தது. பிற மதங்கள் அதற்குப் பிறகு தான் தோன்றின என்று ஒரு பக்கம் கூறி விட்டு, வேறு மதங்கள் தோன்றாத காலத்தில் சனாதன தர்மம் அனைத்து மதங்களையும் மதிக்கச் செய்கிறது என்று கூறுவது பித்தலாட்டம் அல்லவா?

தமிழ்நாட்டு நூலகங்களில் தமிழ் ஆங்கில நூல்கள் மட்டுமே இடம் பெறுகின்றன. பிற மொழி நூல்களை ஒதுக்கி, ‘மொழி ஒதுக்கல்’ செய்கிறார்கள் என்று குற்றம் சாட்டுகிறார். பீகார், குஜராத், உ.பி. மாநில நூலகங்களில் எல்லாம் தமிழ் நூல்கள் வாங்கப்படுகிறதா? தில்லை நடராஜன் கோயிலுக்குள் தேவாரம் பாடுவதையே எதிர்த்த தீட்சதர்களை தலையில் தூக்கி வைத்து ஆடும் ஆளுநர், அங்கே நடக்கும் தமிழ் மொழி ஒதுக்கலை ஏன் கண்டிக்கவில்லை? கடவுளுக்கு சமஸ்கிருதம் மட்டுமே தெரியும் என்று திமிர் பேசும் பார்ப்பனர்களின் மொழி ஒதுக்கலை எதிர்த்து ஏன் பேசவில்லை? கோயில் கோயிலாகச் சுற்றும் ஆளுநர் ரவி, சமஸ்கிருதத்தில் மட்டும் நடக்கும் வழிபாடுகளை மட்டும் ஏற்றுக் கொள்கிறாரே; அதற்கு என்ன பதில்?

தீட்சதர்கள் ‘பால்ய விவாகத்தை’க் காலம் காலமாக தங்கள் குடும்பத்துக்குள் நடத்துவதை சட்ட விரோதம் என்று பேசத் தயாராக இல்லை. மாறாக, தீட்சதர் குடும்ப சிறுமிகளுக்கு இரட்டை விரல் கன்னித் தன்மை சோதனை நடத்தப்பட்டதாக ஏற்கனவே கடந்த பிப்ரவரி மாதம் அரசு மறுத்து ஆளுநருக்கு கடிதம் எழுதியப் பிறகும், பச்சையாக ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ பேட்டியில் பொய் சொல்கிறார். மயிலாடுதுறை வந்தபோது தனக்கு எதிராகக் கருப்புக் கொடிக் காட்டியவர்கள் தனது கார் மீது கல்லெறிந்ததாகவும் பச்சையாக நான்காம்தர அரசியல்வாதி போல் பேசுகிறார். அவரது பாதுகாப்பு வாகனம் மீது ஒரு கருப்புக் கொடி வந்து விழுந்தது என்பதே உண்மை; இதற்கு வீடியோ பதிவுகள் இருக்கின்றன.

பிரிட்டிஷ் ஆட்சியில் சீர்குலைக்கப்பட்ட சனாதனத்தை சிவாஜி மன்னன்தான் மீட்டெடுத்தான் என்று அபத்தமாக வரலாறு தெரியாமல் உளறியிருக்கிறார். மராத்திய மன்னன் சிவாஜி, 1680 பிப்ரவரி மாதம் 3ஆம் தேதியே இறந்து விடுகிறார். 1773இல் பிரிட்டிஷ் ஒழுங்கு முறைச் சட்டம் வந்தது. பிரிட்டிஷ் ஆட்சி வந்ததோ 1858இல். தனது மரணத்துக்குப் பின் வந்த பிரிட்டிஷ் ஆட்சியின் சனாதன சீர்குலைவுகளை இறந்து போன சிவாஜி ‘ஆவியாக’ வந்து சரி செய்தார் என்று கூறுகிறாரா?

என்றைக்குமே மாறாத ஒரு கோட்பாடு நிலைத்து நிற்கிற ஒரு கோட்பாடு, முடிவோ அழிவோ இல்லாத ஒரு கோட்பாடு என்ற ஒன்று இருக்க முடியுமா? இது அறிவியலுக்கு உகந்தது தானா? என்ற அடிப்படை அறிவு கூட இல்லாத ஒருவரை ஆளுநராக நாம் பெற்று இருக்கிறோமே என்பதற்காக நாம் வெட்கி தலைகுனிய வேண்டி இருக்கிறது.

ஆளுநர்களே உங்கள் உளறல் மூட்டைகளை தமிழ்நாட்டில் அவிழ்த்து விட்டுக்கொண்டு மீண்டும் மீண்டும் முகத்தில் கரியை பூசிக் கொள்ளாதீர்கள். திராவிட மாடல் உங்களது கேள்விகளை எதிர்கொள்ளும்! பதிலடி கொடுக்கும்!

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியை தமிழ்நாட்டு மக்களின் ஆதரவு பெற்ற திராவிடத்தை - ஆளுநர் பொறுப்பின்றி பேசி தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளை அதிகாரத் திமிருடன் காலில் போட்டு மிதிக்கிறார்.

ஆளுநரே எல்லை மீற வேண்டாம்!

# மாநாட்டின் பேரணியில் பரிசு பெற்றவர்கள்











## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சேலம் மாநாட்டு உரை நூலாக வெளி வந்து விட்டது

சேலம் மாநாட்டில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நிகழ்த்திய உரை; சென்னையில் கழகம் நடத்திய தமிழர் திருநாள் விழாவில் நிகழ்த்திய உரைகளை இணைத்து “இது தமிழ்நாடு!” எனும் தலைப்பில் நூலாக கழகம் வெளியிட்டுள்ளது.

கடந்த மே 7ஆம் தேதி திருவல்லிக்கேணி பகுதியில் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்ற பொதுக்கூட்ட மேடையில் சென்னை மாவட்டச் செயலாளர் இரா.உமாபதி நூலையும் மாநாட்டு செய்திகள் அடங்கிய “புரட்சிப் பெரியார் முழக்கம்” இதழையும் அமைச்சரிடம் நேரில் வழங்கினார்.

நூல் விலை : ரூ.30/-

நூல் தேவைப்படுவோர் கழக தலைமை நிலையத்தை தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு எண் : + 91 98416 53200 / +91 8973341377

மாநாட்டு புகைப்படங்கள் கபிலன் ஸ்டுடியோ விஜய்குமார், இளவரசன், யாழ் ஸ்டுடியோ ஈரோடு எழிலன்

# செங்கல்பட்டு சுயமரியாதை மாநாட்டுத் தீர்மானம் போல்

# சேலம் மாநாட்டுத் தீர்மானங்களும் வெற்றி பெறும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பெருமிதம்

*கழக மாநில மாநாட்டில் (ஏப்.30) இளைஞர் மற்றும் விளையாட்டுத் துறைஅமைச்சர் மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரையின் கடந்த இதழ் தொடர்ச்சி.*

**பெரியாரின் தொண்டினை படம்பிடிக்கும் வரிகள்!**

தந்தை பெரியாரின் தொண்டினைப் பற்றி ஒருவர் எழுதியிருந்ததைப் படித்தேன்.

“அவரின் கையெழுத்து நன்றாக இருக்காது, ஆனால் நாம் அழகாக எழுதினோம். அவரின் பேச்சு கொச்சையாக இருந்தது, ஆனால் நாம் அழகுத் தமிழில் பேசினோம். அவர் பள்ளிக்கூடம் கூட தாண்டவில்லை, ஆனால் நாம் பல்கலைக் கழகங்களில் பட்டங்கள் பெற்றோம். அவர் உடை கைலியும் சட்டையுமாய் இருந்தது. ஆனால் நாம் கோட்சூட் அணிந்தோம். தந்தையே உன்னை போற்றுகிறோம், தலைநிமிர்ந்து வாழ்த்துகிறோம்.”

பெரியாரையும் அவர் ஆற்றிய தொண்டினையும் சிறப்பாக படம்பிடிக்கும் வரிகள் இவை.

ஒவ்வொரு கூட்டத்திலும் பேசத் தொடங்கும் போது, பெரியார் இப்படி சொல்கிறார். “என்னுடைய கருத்துக்களையும் என்னுடைய அனுபவங்களையும் உங்களுக்குச் சொல்ல எனக்கு உரிமை உண்டு. இதனைப் போன்றே, நான் சொல்லுகின்ற கருத்துக் களை சிந்தித்துப் பார்த்து ஏற்றுக் கொள்ளவோ அல்லது ஒதுக்கி தள்ளவோ உங்களுக்கு உரிமை உண்டு என்கிற அடிப்படையில் தான் எந்தக் கருத்தையும் நான் சொல்கிறேன். நான் சொல்லுகின்ற எல்லாவற்றையும் நீங்கள் அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று நான் கூறவில்லை” என்று சொல்லிவிட்டு தான் பேசவே தொடங்குகிறார்.

உலகத்திலே இப்படி சொல்லிவிட்டு பேசத் தொடங்கிய தலைவர்கள் வேறு யாராவது இருப்பார்களா என்று எனக்கு தெரியவில்லை. யார் பேசினாலும், ஏன் நானே பேசினாலும் நான் பேசுவதை மக்கள் நம்பவேண்டும், ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று நினைத்துத் தான் பேசுகிறேன்.

ஆனால் பெரியார் உங்களுக்கு ஏற்புடையதாக இருந்தால் மட்டும் ஏற்றுக்கொள்ளுங்கள் என்கிறார். அப்படியென்றால், பெரியார் எனும் தலைவனுக்கு தன்னுடைய கருத்துக்களின் மீது எவ்வளவு நம்பிக்கை இருந்திருக்க வேண்டும்.

பெரியார் சமுதாயத்திலே அழுத்தப்பட்ட மக்கள் முன்னேற வேண்டும் என்பதற்காக உழைத்தார். தமிழர்களை படிக்க விடாமல் வைத்திருக்கக் கூடிய ஜாதியை எதிர்த்தார், ஜாதியைப் பாதுகாக்கக் கூடிய மதத்தை எதிர்த்தார். மதத்தை பாதுகாக்கக்கூடிய கடவுளை எதிர்த்தார்.

கடவுள் மறுப்பு கருத்துகளை பேசுகிறார் என்பதற்காக தொடக்கத்தில் பெரியாரை கல்லால் அடித்தார்கள், செருப்பால் அடித்தார்கள், சாணத்தால் அடித்தார்கள், இன்னும் சொல்லப் போனால் மனித மலத்தைக் கூட பெரியாரின் மீது வீசினார்கள். ஆனால் எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்ட பெரியார், எந்த மக்கள் தன்னை அடித் தார்களோ, வெறுத்தார்களோ அந்த மக்களுக்காகவே பேசினார், அந்த மக்களுக்காகவே போராடினார், அந்த மக்களுக்காக உரிமைகளைப் பெற்றுத் தந்தார்.

எந்த மக்கள் முன்பு பெரியாரை வெறுத் தார்களோ, அந்த மக்களே பின்பு பெரியாரின் தொண்டைப் புரிந்து கொண்டு அவருக்கு நன்றி செலுத்தக் கூடியவர்களாக மாறினார்கள். மரணமடைவதற்கு 3 நாட்களுக்கு முன்பு வரை பொதுக்கூட்டங்களில் கலந்துகொண்டு மக்களிடம் பேசிய தலைவர் பெரியார்.

**வாழ்நாள் பாராட்டு!**

‘தமிழ்நாடு’ என பெயர் சூட்டுவதில் அண்ணாவுக்கு இருந்த அந்த உறுதிப்பாட்டை சமீபத்தில் கூட நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நினைவுகூர்ந்தார்கள். பேரறிஞர் அண்ணாவின் மணி விழாவை கோபாலபுரம் இளைஞர் தி.மு.க. சார்பில் நடத்த தேதி கேட்பதற்காக அண்ணாவின் நுங்கம்பாக்கம் இல்லத்துக்கு செல்கிறார் நம்முடைய முதலமைச்சர் அவர்கள். அப்போது, அண்ணாவுக்கு உடல்நிலை சரியில்லை என்று கூறி அனுப்பு கிறார்கள்.



பிறகு மீண்டும் கோபாலபுரம் வந்து விடுகிறார். இந்த விஷயம் கேள்விப்பட்ட அண்ணா உடனே தன்னுடைய காரினை அனுப்பி நம் தலைவர் அவர்களை அழைத்து வரச் சொல்கிறார். அப்போது நம் தலைவர் அவர்களுக்கு வயது 16 தான். முதலமைச்சர் அண்ணாவின் காரில் ஏறி மீண்டும் அவரது வீட்டுக்கு செல்கிறார். அங்கு சோர்வாக இருந்த அண்ணா, என்ன வேண்டும் என்று கேட்க இளைஞர் தி.மு.க. சார்பில் உங்கள் மணி விழாவை நடத்த விரும்புகிறோம். நீங்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டும். எனவே, உங்கள் தேதியை தாருங்கள் என கேட்கிறார் நம் முதலமைச்சர். இதைக் கேட்ட அண்ணா, “உன் அப்பனைப் போலவே பிடிவாதக்காரனாக இருக்கிறாயே,” என்று சொல்கிறார். இதை தன்னுடைய வாழ்நாள் பாராட்டாகவே எடுத்துக் கொண்டதாக நம் தலைவர் அவர்கள் கூறினார்கள்.

**‘தமிழ்நாடு’ எனப் பெயர் சூட்டும் விழா!**

தன் மணிவிழாவுக்கு உடல்நிலைக் குறைவால் வர முடியாத நிலையில் இருந்த பேரறிஞர் அண்ணா, தமிழ்நாட்டுக்கு ‘தமிழ்நாடு’ என்று பெயர் சூட்டும் அந்த விழாவுக்கு வந்தார். உடல்நிலை சரியில்லாத நேரத்தில் அந்த நிகழ்ச்சிக்குச் செல்ல வேண்டாம் என மருத்துவர்கள் எவ்வளவோ எச்சரித்தார்கள்.

ஆனால், தாய்த்திருநாட்டுக்கு ‘தமிழ்நாடு’ என பெயரிடும் நிகழ்ச்சியில் பங்கேற்க முடியாவிட்டால் இந்த உயிர் இருந்தால் என்ன “போனால் என்ன?” என்று கூறிதான் ‘தமிழ் நாடு’ எனும் பெயர் சூட்டும் விழாவில் நம்முடைய அறிஞர் அண்ணா அவர்கள் அன்று கலந்து கொண்டார்கள்.

அண்ணா காலத்தில் தமிழ்நாடு என்ற பெயர் கூடாது என்றார்கள். இப்போது நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய காலத்திலும் தமிழ்நாடு என்கிற பெயர் அவர்களின் கண்களை உறுத்துகிறது.

ஒரு மாநிலத்தின் பெயரை மாற்ற வேண்டும் என்று அவர்கள் அவ்வளவோ விடாப்பிடியாக இருக்க காரணம் என்ன? ஏனென்றால் அந்தப் பெயர் அவர்களை தொந்தரவு செய்கிறது.

‘தமிழ்நாடு’ என்ற அந்தப் பெயர்தான் தமிழ் மக்களை, தாங்கள் ஒரு தேசிய இனம் என்ற உணர்வைப் பெற வைத்தது. எமர்ஜென்சியை அப்போதைய பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அமல்படுத்திய போது, நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய ஆட்சி நடந்தது. அப்போது, எமர்ஜென்சியை கடுமையாக எதிர்த்தவர் நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

**எமர்ஜென்சி காலத்து ‘மிசா’ கைது!**

அதனால் தான், தமிழ்நாடு இந்தியாவில் தனித்தீவாக உள்ளது என்று இந்திரா காந்தி கூறினார். எமர்ஜென்சி காலத்தில் மாநில கட்சிகள் தடை செய்யப்படும் என்று ஒரு செய்தி பரவியது.

அப்போது தான் அ.தி.மு.க. அனைத்து இந்திய அண்ணா தி.மு.க. ஆனது. ஆனால், தி.மு.க. அப்போதும் தி.மு.க.வாகவே இருந்தது. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தீவிர அரசியலுக்கு வரக் காரணமே எமர்ஜென்சி காலத்து மிசா கைதுதான்.

அ.தி.மு.க. அப்போதும் டெல்லி சொல் கேட்டு நடந்தது. இப்போதும் டெல்லி சொல் கேட்டு தான் நடக்கிறது. ஆனால், நாம் அன்றும் நம் உரிமைகள் பறிக்கப்பட்ட போது, டெல்லிக்கு எதிராக நின்றோம், இன்றும் நம் உரிமைகளுக்காக டெல்லியை கேள்வி கேட்கிறோம்.

**வி.பி.சிங்கிற்கு சென்னையில் சிலை!**

இன்றைக்கு சமூகநீதியின் தலைநகராக தமிழ்நாடு விளங்கிக் கொண்டிருக்கிறது. சமூகநீதிக்கு ஆபத்து என்றால், அதற்காக முதலில் வருகிற குரல் நம்முடைய முதலமைச்சருடையதாக இருக்கிறது.

பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 27 சதவீத இட ஒதுக்கீட்டைத் தந்த சமூகநீதிக் காவலர் வி.பி.சிங் அவர்களுக்கு சென்னையில் கம்பீர சிலை அமைக்கப்படும் என்று சட்டமன்றத்தில் அறிவித்திருக்கிறார் நம்முடைய முதலமைச்சர்.

இந்தியா முழுவதும் உள்ள கோடான கோடி பிற்படுத்தப்பட்ட மக்கள் இன்று கல்வியிலும் வேலைவாய்ப்பிலும் அனுபவிக்கும் 27 சதவீத இடஒதுக்கீட்டுக்கு சமூகநீதிக் காவலர் வி.பி. சிங்கே காரணம். இது போன்ற வரலாறுகளை எல்லாம் நாம் தெரிந்து கொள்வதோடு, நம் வீட்டுக் குழந்தைகளுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும்.

இல்லையெனில், நம்முடைய எதிரிகள் அவர்களுடைய தவறான கொள்கைகளை நம்முடைய பிள்ளைகளின் மூளையிலே ஏற்றி விடுவார்கள். இன்றைக்கு நம் வீடுகளிலே கூட சில பிள்ளைகள் இடஒதுக்கீடு பற்றி சரியாக புரிந்து கொள்ளாமல் இருக்கிற நிலைமையைப் பார்க்கிறோம்.

ஜாதி ரீதியாக இடஒதுக்கீடு கொடுக்கக் கூடாது, பொருளாதார ரீதியில்தான் கொடுக்க வேண்டும் என்ற விஷமத்தனமானக் கருத்துகளை பேசுவதைப் பார்க்கிறபோது கவலையாக இருக்கிறது.

**எதிரிகளை அலறவிட்ட பேரறிஞர் அண்ணா!**

பெரியாருக்கும் அண்ணாவுக்குமான பிரிவு 18 ஆண்டுகள் நீடித்தது. அப்போது, இதோடு திராவிட இயக்கமே முடிந்தது என்று பாசிஸ்ட்டுகள் உற்சாகப்பட்டனர். ஆனால், 1967 தேர்தலில், கழகம் வெற்றி பெற்றதும், “வண்டியை திருச்சிக்கு விடு, பெரியாரைச் சந்திக்க வேண்டும்,” என கூறி அண்ணா நம் எதிரிகளை அலறவிட்டார். பெரியாருக்கு தம்முடைய அமைச்சரவையே காணிக்கை என்று அறிவித்தார் பேரறிஞர் அண்ணா.

**தந்தை பெரியாருக்கு அரசு மரியாதை!**

தந்தை பெரியார் அவர்கள் மறைந்தபோது அவரை அரசு மரியாதையுடன் அடக்கம் செய்ய ஆணை பிறப்பித்தார் முத்தமிழறிஞர் கலைஞர். தந்தை பெரியார் எந்த அரசுப்பதவியிலும் இருந்ததில்லை, அவருக்கு எப்படி அரசு மரியாதை கொடுக்க முடியும் என்று அதிகாரிகள் கேட்டபோது, கலைஞர் சொன்னார், “காந்தி எந்த அரசுப் பதவியில் இருந்தார். அவருக்கு எப்படி அரசு மரியாதை கொடுக்கப் பட்டதோ அதே மாதிரி தந்தை பெரியாருக்கும் அரசு மரியாதை கொடுக்க வேண்டும், அதனால் என்னுடைய ஆட்சியே போனாலும் பரவாயில்லை” என்றார் கலைஞர்.

அவர்களுடைய வழியில் வந்த நம்முடைய முதலமைச்சர் அவர்கள், தந்தை பெரியாரின் பிறந்தநாளை சமூகநீதி நாளாகவும் அதேபோல் அம்பேத்கரின் பிறந்தநாளை சமத்துவ நாளாகவும் அறிவித்தார்.

**தந்தை பெரியாருக்குக் காட்டும் நன்றி உணர்வு!**

அதுமட்டுமல்ல, தந்தை பெரியார் நடத்திய வைக்கம் போராட்டத்தின் நூற்றாண்டு விழாவை தமிழ்நாடு அரசு ஆண்டு முழுவதும் நடத்தும் என்றும் அறிவித்திருக்கிறார் என்றால், இவையெல்லாம் தந்தை பெரியாருக்கு நாம் காட்டுகிற நன்றி உணர்வு.

பெரியார் வழியில் நம்முடைய முதலமைச்சர் அவர்களும் புதுமைப்பெண் திட்டத்தின் கீழ் பெண்களின் கல்விக்காக மாதம் 1000 நிதியுதவி கொடுக்கிறார். குடும்பத் தலைவிகளுக்கு மாதாமாதம் 1000 ரூபாய் உரிமைத் தொகையினை பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாளில் வழங்க இருக்கிறார். பெண்களுக்கு கட்டணமில்லா பேருந்து பயணம் என்ற திட்டத்தை தந்துள்ளார்கள்.

மாநில உரிமைகளை பாதுகாப்பதிலும் நம்முடைய அரசு கவனமுடன் செயல்பட்டு வரு கிறது. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மாநில சட்டமன்றங்களில் நிறைவேற்றப்படும் சட்ட மசோதாக்களுக்கு ஒப்புதல் வழங்க ஆளுநர்களுக்கு கால நிர்ணயம் செய்யும் வகையில் அரசமைப்புச் சட்டத்தை திருத்த வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றினார்கள். அதுமட்டுமல்லாமல், பிற மாநில முதலமைச்சர்களுக்கும் நம்முடைய முதலமைச்சர் கடிதம் எழுதினார்.

**‘தீ பரவட்டும்!’**

இதனை டெல்லி, கேரளா, மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களின் முதலமைச்சர்கள் பாராட்டி பதில்

(4ஆம் பக்கம்)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY  TAMIL WEEKLY  REG.NO.TN/CC(S)DN/459/22-24  LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/22-24
PURATCHI PERIYAR MUZHAKKAM  REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

## பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் உரை

# மாநாட்டின் வெற்றிக்கு அடித்தளம் நமது தோழர்களின் உழைப்பு – அர்ப்பணிப்பு

*மாநாட்டில் நிறைவாக உறுதிமொழியைப் படிப்பதற்கு முன், கழகப் பொதுச் செயலாளர் நிகழ்த்திய சுருக்கமான உரை:*



இந்த மாநாட்டைப் பொறுத்த வரை மாநாடு அறிவிக்கப்பட்ட தேதியில் இருந்து தமிழ்நாடு முழுவதும் இருக்கிற நமது தோழர்கள் ஆற்றிய பணி மிகப் பெரிய அளவிடற்கரியது; மதிப்புக்குரியது. குறிப்பாக கடைவீதிகளில் சாதாரண மக்களை சந்தித்து கடைவீதி வசூல் என்ற ஒரு இயக்கத்தைத் தொடங்கி இரண்டு மூன்று வாரங்களாக தோழர்கள் இதே பணியை செய்து மாநாட்டிற்கு நிதி திரட்டினார்கள். சுவர் எழுத்து விளம்பரங்களை செய்தனர், மாநாட்டுப் பணிகளில் தங்களை முழுமையாக மூழ்கடித்து, அர்ப்பணித்து செயல்பட்டனர். இந்த மாநாடு மிகப் பெரிய வெற்றியடைவதற்கு அடித்தளமிட்டது, கழகச் செயல் வீரர்களின் கடுமையான உழைப்பு ஒன்று மட்டும்தான் என்பதை இந்த மாநாட்டின் வழியாக நாம் சொல்லியாக வேண்டும்.

சேலம் மாவட்டத்தைப் பொருத்தவரையில் அந்த மாவட்ட கழகத் தோழர்கள் கடைவீதி வசூலில் மிகப்பெரிய சாதனையை நிகழ்த்திக் காட்டினார்கள். தொடர்ச்சியாக மக்களை சந்தித்து சாதாரண மக்களிடம், கடை மற்றும் வணிக நிறுவனங்களிடம் இருந்து ஒரு மிகப் பெரிய தொகையினை திரட்டி இந்த மாநாட்டை நடத்தி இருக்கிறார்கள். இந்த மாநாட்டிற்கு நாங்கள் தலைப்பை தேர்வு செய்து கொடுத்தபோது இந்த தலைப்பே தோழர்கள் மத்தியில் மிகுந்த உற்சாகத்தையும் பேரெழுச்சியையும் தந்தது என்பதை எங்களால் உணர முடிந்தது. இரண்டாம் முறையாக அதுவும் இரண்டு நாள் மாநாடாக நடத்தி இந்த மாநாட்டிற்காக ஒரு நோக்கத்தை வரையறுத்தோம். அதற்கான செயல் திட்டத்தை உருவாக்கினோம். இந்த மாநாட்டின் உண்மையான நோக்கத்தில் 100% வெற்றி பெற்றிருக்கிறோம் என்பதை பெருமையோடு மகிழ்ச்சியோடும் நாம் ஒவ்வொருவரும் உரிமை கொண்டாடலாம்.

குறிப்பாகச் சொல்லப் போனால் சேலம் மாவட்ட தோழர்களின் உழைப்பு அவ்வளவு சாதாரணமானதல்ல. சேலத்தில் மிகப் பெரிய எண்ணிக்கை யில் தோழர்கள் இல்லாவிட்டாலும் அவர்கள் இதற்காக செய்த அர்ப்பணிப்பும், கடும் உழைப்பும் விலை மதிப்பில்லாதது மட்டுமின்றி பாராட்டக்கூடிய ஒன்று. கடுமையாக உழைத்து இந்த மாநாட்டை வெற்றி பெறச் செய்த சேலம் மாவட்ட கழகத் தோழர்களுக்கு திராவிடர் விடுதலைக் கழகம் தலை தாழ்ந்த வணக்கத்தை, மகிழ்ச்சியை உளப்பூர்வமாக தெரிவித்துக் கொள்கிறது. பல்வேறு மாவட்டங்களில் இந்த மாநாடு அறிவிக்கப்பட்டதிலிருந்து மிகுந்த உற்சாகத்தோடு எந்தவித தூண்டலும் இல்லாமல் தன் முனைப்பாக எழுந்து களப்பணியாற்றிய நிகழ்வை நாங்கள் முகநூல் வழியாக, தோழர்கள் அனுப்பிய செய்திகளின் வழியாக உணர முடிந்தது. எங்களுக்கே இவ்வளவு வலிமையான தொண்டர்களைப் பெற்ற இயக்கத்திற்கு பொறுப்பாளர்களாக இருக்கிறோமா என்றவொரு நம்பிக்கையையும், உணர்வையும், பெருமிதத்தையும் உங்களது உழைப்பும் களப்பணியும் தந்திருக்கிறது.

எல்லாவற்றிற்கும் மேலாக திராவிடர் விடுதலைக் கழகத்தின் சில தனித்துவமான பண்புகளை கட்டிக் காட்ட வேண்டும். அந்தப் பண்பு சட்டத்தால் வரிகளால் எழுதப்படாத ஒன்று. எந்த வேலை செய்தாலும் அதில் தன்னை முன்னிலைப்படுத்திக் கொள்ளாமல் கடமை உணர்வுடன் பணியாற்ற வேண்டும் என்ற விளம்பர வெளிச்சம் இல்லாமல் செயலாற்றக் கூடிய தொண்டர்களை கொள்கை உணர்வாளர்களைக் கொண்ட இயக்கமாக திராவிடர் விடுதலைக் கழகம் நிமிர்ந்து நிற்கிறது. அதேபோல இந்த மாநாட்டை இளம் தலைமுறையினரின் மாநாடாக நாம் அறிவித் திருந்தாலும் வேறெந்த தேர்தல் அரசியலில் ஈடுபடாத கட்சியிலும் இயக்கங்களிலும் இல்லாத அளவிற்கு கொள்கை அர்ப்பணிப்புள்ள இளைஞர்களை மட்டுமே கொண்ட இயக்கமாக திராவிடர் விடுதலைக் கழகம் இருக்கிறது என்பதை இன்றைய பேரணியும் மாநாடும் தமிழ்நாட்டு மக்களுக்கு நிரூபித்து காட்டியிருக்கிறது. நமது அமைப்பில் தலைமை பொறுப்பில் இருக்கிற பொறுப்பாளர்களைத் தவிர மற்ற அனைவரும் இளைஞர்கள், இளம்பெண்கள் ஆவார்.

இந்த மாநாட்டில் நாங்கள் பார்த்து வியந்த ஒன்று, இந்த மாநாட்டில் பேச்சாளர்களாக கருத்தாளர்களாக நமது இயக்கத்தைச் சேர்ந்த தோழர்களை அதிகளவு பயன்படுத்த வேண்டும் என்று நாங்கள் முடிவு செய்தோம். அதற்காக நம்முடைய தோழர்களை தேடித் தேடி கண்டுபிடித்து, பெண் தோழர்கள், ஆண் தோழர்கள் என நமது தோழர்களையே மேடை ஏற்றினோம். ஆனால் இரண்டு நாட்களாக நம்முடைய தோழர்கள் ஆற்றிய கருத்துரைகள், சிந்தனை வெளிச்சங்கள் எங்களை மெய்சிலிர்க்க வைத்து விட்டன. இந்த மாநாட்டைப் பார்த்தவர்கள் திராவிடர் விடுதலைக் கழகத்தில் உணர்ச்சியுள்ள தோழர்கள் மட்டுமல்லாமல் அறிவார்ந்த கருத்தாளர்களையும் சிந்தனையாளர்களையும் கொண்ட இளைஞர்களின் இயக்கமாக மிளிர்ந்து கொண்டிருக்கிறது என்று பாராட்டுகிறார்கள்.

மாண்புமிகு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டதைப் போல கட்சி அரசியலில் ஈடுபடாத இவ்வளவு பெரிய இளைஞர்கள் கூட்டம் இங்கே இருப்பதை பார்த்து நான் வியந்துப் போனேன்; பெருமைப்படுகிறேன் என்று சொல்லுகிற அளவிற்கு அவர்களை வியப்படையச் செய்கிற சக்தியாக நாம் இன்று நிமிர்ந்து நிற்கிறோம். இந்த சக்தியை நாம் மீண்டும் வளர்த்தெடுப்போம். இந்த சக்தி தமிழ்நாட்டின் சமூகக் களத்தை நிர்ணயிக்கின்ற ஒரு சக்தியாக நாம் மாற்றிக் காட்டுவோம்.

அனைத்து துறைகளிலும் சிறந்த விளங்குகிற தோழர்கள் நம்மிடம் இருக்கிறார்கள். இத்தனை குறும்படங்களை தயாரித்தவர்கள், சுவரெழுத்து விளம்பரங்களை செய்தவர்கள், இந்த மாநாட்டிற்காக மக்களை சந்தித்து அவர்களது மொழியில் கருத்துக்களை தெரிவித்தவர்கள் என்று பல்வேறு துறைகளில் திறமையுள்ள இளைஞர்களைக் கொண்டது நமது கழகம். நமது வெளியீடுகளுக்கு நமது இயக்கத் தோழர்கள் தான் அட்டை படங்களை வடிவமைக்கிறார்கள்; நமது இயக்கத் தோழர்கள் தான் நூல்களை வடிவமைக்கிறார்கள்; நமது இயக்கத் தோழர்கள் தான் கணிப்பொறியை மிகச் சிறப்பாக பயன்படுத்துகிறார்கள்; நமது இயக்கத் தோழர்கள் தான் குறும்படங்களை தயாரிக்கிறார்கள்; நமது இயக்கத் தோழர்கள் தான் குறும்படங்களுக்கு எழுத்து வடிவங்களை தருகிறார்கள்; நமது இயக்கத் தோழர்கள் தான் ‘எடிட்’ செய்கிறார்கள்; இயக்குகிறார்கள்; சிறந்த இசைக் கலைஞர்கள், பாடகர்கள் இங்கே இருக்கிறார்கள். இப்படி நமது இயக்கம் வலிமை கொண்ட இளைஞர் படையாக, கருத்தாயுதம் மிக்க தொண்டர்களைக் கொண்ட இயக்கமாகப் பெண்களும் ஆண்களுமாக வீறுநடைபோட்டு கம்பீரமாக நிற்கின்றது. நமது இயக்கத்திற்கு இந்த இரண்டு நாள் மாநாடு புதிய நம்பிக்கையை ஊட்டும், புதிய நம்பிக்கையோடும் வெளிச்சத்தோடும் நாம் பயணிப்போம் என்பதை இந்த மாநாடு உறுதிப்படுத்துகிறது, என்றார் விடுதலை இராசேந்திரன்.

*(3ஆம் பக்கத் தொடர்ச்சி)*

*கடிதம் அனுப்பியிருக்கிறார்கள் என்றால், பேரறிஞர் அண்ணா ‘தீ பரவட்டும்’ என்று சொன்னது போல தீ பரவத் தொடங்கியிருக்கிறது.*

*முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தன் வாழ்நாள் முழுவதும் திராவிட இயக்கங் களுடனும் - திராவிட சிந்தனையாளர்களுடன் அவ்வளவு நெருக்கமாக இருந்தார். திராவிட இயக்கங்களின் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட பல தீர்மானங்களை ஆட்சிக்கு வரும்போதெல்லாம் சட்டமாக்கிய பெருமை திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு உண்டு. 1929 ஆம் ஆண்டு நடைபெற்ற செங்கல்பட்டு சுயமரியாதை மாநாட்டில் பெண்களுக்கு சொத்துரிமை வேண்டுமென தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. பெண்களுக்கு சொத்துரிமை என இந்திய ஒன்றியத்திலேயே முதன்முறை யாக 1989-ல் சட்ட வடிவம் கொடுத்தவர் நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.*

*அந்த வகையில், இந்த மாநாட்டில் நிறைவேற்றப்படுகிற தீர்மானங்களும் நிச்சயம் ஒரு நாள் சட்டம் ஆக்கப்படும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.*

**ஒற்றுமையுடன் செயல்படவேண்டும்!**

*இந்த நேரத்தில் நான் ஒன்றை கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். தேர்தல் அரசியலில் ஈடுபடாத நம்முடைய திராவிட இயக்கங்கள் பல தனித்தனியாக இயங்குகிறீர்கள். நீங்கள் அனைவரும் ஒற்றுமையுடன் ஒன்றாக இருந்து செயல்பட வேண்டும் என்பதுதான் அது.*

*தந்தை பெரியாரின் லட்சியங்களை நம் நெஞ்சில் ஏந்துவோம் அவருடைய மன உறுதியை நாம் பெறுவோம், அவர் காண விரும்பிய ஒரு சமத்துவ சமதர்ம தமிழ் நாட்டை உருவாக்க உறுதியேற்போம். தமிழ் நாடு தமிழ்நாடாகவே இருக்க என்றைக்கும் தொடர்ந்து உழைப்போம்.*

*முக்கியமாக அடுத்து நாடாளுமன்றத் தேர்தல் வரவிருக்கிறது. இது மிக மிக முக்கியமான தேர்தல். இந்த தேர்தலில் ஒட்டுமொத்த இந்தியாவை வழிநடத்துகிற தலைவராகவும் நம்பிக்கையாகவும் இருப்பவர் நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் முதலமைச்சர் அவர்கள்.*

*எப்படி சென்ற சட்டமன்றத் தேர்தலில் பாசிஸ்டுகளின் அடிமைகளை வீட்டுக்கு அனுப்பினோமோ, அதே போல வரவிருக்கிற மக்களவை தேர்தலில் பாசிஸ்டுகளையும் வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என்ற உறுதியோடு உழைப்போம் என கேட்டுக் கொண்டு விடை பெறுகிறேன்.*

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP  Posted: 11th May 2023

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN